

கழக முப்பெரும் விழாவினை முன்னிட்டு, உதகை கிழக்கு நகர தி.மு.க. சார்பில் உதகை நகர கழக செயலாளர் எஸ். ஜார்ஜ் தலைமையிலும், ஏற்பாட்டின் பேரிலும் முள்ளிக்கொரை அன்பு அறிவு ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ள ஏழை எளியோருக்கு ஒரு மாதத்திற்கான மளிகை மற்றும் அதியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டது. இதில் முன்னாள் மத்திய அமைச்சரும், நீலகிரி பாராளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா முன்னிலை வகித்து நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் போஜன், மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, தலைமைப் பொதுக் குழு உறுப்பினர் வாணீஸ்வரி, ஒன்றியச் செயலாளர்கள் தொரை, ஜெகதீஷ், நகர அவைத் தலைவர் ஜெயகோபி, நகரத் துணைச் செயலாளர்கள் கார்டன் கிருஷ்ணன், ரீட்டா மேரி,இச்சுபாய், நகரப் பொருளாளர் அனில் குமார், மாவட்டப் பிரதிநிதி வெங்கடேஷ் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### தி.மு.க. மீது பொய்யான தகவல்களை பரப்பி வருகிறது த.வெ.க. அரசு!

# அமைச்சர்களின் பொய் குற்றச்சாட்டுகளுக்கு பதில் கொடுக்க அனுமதி மறுக்கப்படுகிறது!

### பேரவையில் இருந்து வெளிநடப்புக்கு பின் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி பேட்டி!

சென்னை, செப்.2-

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறையில் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் பேரவையில் இருந்து தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். வெளிநடப்புக்குப் பின் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி பேட்டியளிக்கையில், தி.மு.க. மீது பொய்யான தகவல்களை த.வெ.க. அரசு பரப்பி வருகிறது என்றும், த.வெ.க. அமைச்சர்களின் பொய் குற்றச்சாட்டுகளுக்கு பதில் கொடுக்க அனுமதி மறுக்கப்படுகிறது என்றும், தி.மு.க. ஆட்சியில் டாஸ்மாக் நிர்வாகம் வெளிப்படைத்தன்மையுடன் சிறப்பாக செயல்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்த பின் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு கூறுகையில், அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது பொய் பேசுகிறார்கள். பார்ட்டி பண்ட் என்று சொன்னாங்க. அதற்கு விளக்கம் சொல்ல நாங்கள் கேட்டதற்கு சபாநாயகர் அனுமதி தரவில்லை. அந்தத் துறையின் முன்னாள் அமைச்சர் உங்களுக்கு பேட்டி அளிப்பார்.

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-



மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை மானியக் கோரிக்கையில் அந்தத் துறையின் அமைச்சர் பதிலுரையில் தன்னுடைய உரையின்போது, பார்ட்டி பண்ட் என்று பொத்தாம் பொதுவாக சொல்வதைப் போல ஒரு கருத்தை முன் வைத்து அதனை சட்டமன்றத்தில் பதிவு செய்தார்கள். அது குறித்து நாங்கள் உரிய விளக்கங்களை எழுப்புவதற்கு அனுமதி கேட்ட போது பேரவைத் தலைவர் அனுமதி தர மறுத்துவிட்டார். அதனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வெளிநடப்பு செய்தோம்.

ஒரு துறையினுடைய அமைச்சர் பேசுகின்ற போது உரிய ஆதாரங்களோடு அந்தக் கருத்துக்களை முன்வைக்க வேண்டும். அதற்கு மாறாக நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று பொத்தாம் பொதுவாக சொல்வதைப் போல சட்டமன்றத்தில் ஒரு கருத்தை பதிவு செய்வது ஏற்புடையது அல்ல.

பார்ட்டிபண்ட் என்று பொத்தாம் பொதுவாக ஒரு கருத்தை முன்வைக்கும் போது, ஒரு உண்மைக்கு மாறான பொய்யான தகவலை சட்டமன்றத்தில் பதிவு செய்தார். அதற்கு மறுப்பு தெரிவிக்க பேரவைத் தலைவர் அனுமதி கொடுக்கவில்லை.

இன்றைய துறையில் குறிப்பாக மது விலக்குத் துறையில் கூடுதல் சிறப்புரிமை கட்டணம் என்ற பெயரில் மதுபான உற்பத்தியாளர்களிடமிருந்து அந்தக் கட்டணத்தை நிர்ணயம் செய்து, அதன் மூலம் வரக்கூடிய தொகையை டாஸ்மாக் நிர்வாகத்திற்கு கூடுதல் வருவாய் வந்ததாக அந்த கருத்தை முன்வைக்கின்றார்.

ஒரு அரசு, அந்தத் துறையை நிர்வகிக்கின்ற போது சில நேரங்களில், விற்பனைக்கான கட்டணத்தை மதுவின் விலையை உயர்த்துகின்றபோது வருவாய் அதிகரிக்கும். இந்த த.வெ.க. அரசு விலையை உயர்த்தாமல் சிறப்புரிமை கட்டணம் என்ற பெயரில் அதற்கான கட்டணத்தை நிர்ணயம் செய்து, வசூல் செய்திருக்கின்றார்கள்.

அதன் மூலம் டாஸ்மாக் நிர்வாகத்தின் வருவாயை அதிகரித்து இருக்கிறார்கள். அதற்கு அவர்கள் புதிய பெயரை வைக்கின்றார்கள். இதற்கெல்லாம் முன்பாக பார்ட்டி பண்ட் என்ற பெயரில் யாரோ ஒருவர் வசூல் செய்ததைப்போல அது எங்கேயோ சென்றதைப்போல ஒரு தோற்றத்தை உருவாக்குகிறார்கள்.

நிச்சயமாக அதுபோன்ற தவறு இருந்தால் இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கலாம். அதற்கு மாறாக தி.மு.க. அரசு மீதும் எங்கள் நிர்வாகத்தின் மீதும் பல்வேறு குற்றச்சாட்டுகளை சொல்வதைப்போல, இது உண்மைக்கு மாறான பொய்யான கருத்துகளை தொடர்ந்து இதுபோன்ற கருத்துக்களை த.வெ.க. அரசு செய்வதை முன்னெடுப்பதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். பேரவையில் இதற்கான விளக்கத்தை அளிப்பதற்கு பேரவைத் தலைவர் அனுமதி கொடுக்கவில்லை. இதனால் நாங்கள் வெளிநடப்பு செய்திருக்கின்றோம்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி பேட்டியளித்தார்.

### சேலம் மாவட்டம் - ஆத்தூர் - நரசிங்கபுரம், பழனியாபுரி சாலையில்

# ரயில்வே சுரங்கபாதை அமைக்கும் இடத்தில் வழித்தடப் பிரச்சினை!

### தே.மலையரசன் எம்.பி. ஆய்வு செய்து உடனடி தீர்வு காணப்பட்டது!

சேலம், செப்.2-

சேலம் மாவட்டம் ஆத்தூர் அடுத்த நரசிங்கபுரம் பழனியாபுரி சாலையில் சர்க்கார் உடையாம்பட்டி பகுதியில் ரயில்வே சுரங்கப்பாதை அமைக்கும் பணிக் கடந்த ஒரு மாதமாக நடைபெற்று வருகிறது.

இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் சென்று வர தனிப் பாதை வசதி இல்லாததால், பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு கட்ட போராட்டங்கள் நடத்தியும், மனுக்கள் மூலமும் அதிகாரிகளிடம் புகார் தெரிவித்து வந்தனர்.

இதையடுத்து, 20 நாட்களுக்கு முன்பு ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர், தாசில்தார் உள்ளிட்ட அதிகாரிகள் சம்பவ இடத்தில் ஆய்வு செய்து, பொது மக்களின் கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர். இந்நிலையில், கடந்த 30.8.2026 ஆம் அன்று கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆய்வு செய்தார்.

அப்போது பொதுமக்கள் கூறுகையில், இப்பகுதியில் சுமார் 200 குடும்பங்கள் பல ஆண்டுகளாக வசித்து வருகிறோம். சுரங்கப்பாதை



அமைப்பதற்கு முன்பு ரயில்வே, வருவாய்த்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் இணைந்து ஆய்வு செய்து, பாலத்தின் இரு புறமும் தலா 15 அடி அகலத்தில் பாதை ஒதுக்கி, குடி யிருப்புகள் மற்றும் விவசாய நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பணிகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தனர்.

மேலும், சாலை செல்லும் கிழக்குமேற்கு திசையி லேயே சுரங்கப்பாதை அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்ட நிலையில், தற்போது தெற்கு-வடக்கு திசையில் பணிகள்கள் நடைபெறுகிறது.

இருபுறமும் போதிய பாதை வசதி ஏற்படுத்தப்படவில்லை இதனால் குடியிருப்புகள் மற்றும் விவசாய நிலங்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்படுவதுடன், விபத்து அபாயமும் உள்ளது. குடியிருப்புகள் மற்றும் விவசாய நிலங்களுக்கு செல்லவும், கார், லாரி, பஸ் உள்ளிட்ட வாகனங்கள் சென்று வரும் வகையில் உரிய சாலை மற்றும் மாற்றுப்பாதை வசதி ஏற்படுத்த வேண்டும் என்றனர்.

இதையடுத்து, சுரங்கப் பாதை பணிகள் நடைபெறும் இடத்தை தே. மலையரசன் எம்.பி., நேரில் ஆய்வு செய்து, இது குறித்து அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

இதனை தொடர்ந்து 31.08.2026 அன்று ரயில்வே முதுநிலை கோட்ட பொறியாளர் பவன் சம்பவ இடத்திற்கு நேரில் வந்து ஆய்வு செய்து பொதுமக்கள் மற்றும் விவசாயிகளிடம் கோரிக்கைகளை கேட்டறிந்து போக்குவரத்து மற்றும் பொது மக்களுக்கு எந்தவித இடையூறு இல்லமால் வழித் தடங்கள் அமைத்து தர உறுதியளித்தார். இதனால் அப்பகுதி மக்கள், பொதுமக்கள், விவசாயி கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். இதனை தொடர்ந்து அப்பகுதி மக்கள் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசனுக்கு நன்றி தெரிவித்தனர். ஆய்வின் போது தே. மலையரசன் எம்.பி., ஆத்தூர் ஒன்றிய செயலாளர் டாக்டர் வே. செழியன், நரசிங்கபுரம் நகர செயலாளர் என்.பி. வேல்முருகன், நகரமன்ற தலைவர் அலெக்சாண்டர் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# உங்களுக்கு வந்தால் இரத்தம் எங்களுக்கு வந்தால் தக்காளி சட்னியா?

சட்டசபையில் வசந்தம் கார்த்திகேயன் இடம்மாறி உட்கார்ந்தால் சத்தமிடும் சபாநாயகர், முதல்வர் விஜய் இடம்மாறி அமரும்போது மட்டும் அமைதி காப்பதா? ஆளுக்கு ஒரு சட்டமா? அனைத்து உறுப்பினர்களின் செயல்பாட்டை நிறுத்திட திட்டமா?

சட்டமன்றத்தில் அக்ரி கிருஷ்ணமூர்த்தி லெட்டர்பேடில் முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ் படம் இருந்ததாம், அக்ரிக்கு எதிரில் அமர்ந்திருந்த அவை முன்னவர் செங்கோட்டையன் திடீரென எழுந்து, "அக்ரி கிருஷ்ணமூர்த்தி கையில் வைத்திருந்த லெட்டர்பேடை நான் பார்த்தேன், அந்த லெட்டர்பேடில் இருக்கும் படத்தில் இருப்பவர் இடம்மாறி விட்டார் ஆனால் அவர் படம் மாறவில்லை" என்கிறார் செங்கோட்டையன்.

அடுத்தவர் லெட்டர்பேடினை எட்டிப் பார்ப்பது அடுத்தவர் படுக்கையறையை எட்டிப் பார்ப்பது போல, கட்டிய கணவனாக இருந்தாலும் மனைவியின் கடிதத்தையோ, நாட்குறிப்பையோ எட்டிப்பார்க்கக் கூடாது. இந்தப் பழக்கம் சீட்டாட்டத்தில் எட்டிப் பார்க்கும் கெட்ட நாயகன் வேலை. இது தொட்டில் பழக்கம் போல அமைச்சர் செங்கோட்டையனுக்கு.

அது சரி, படத்தைப் பற்றி தடம் மாறியவர் பேசலாமா? ஈயத்தைப் பார்த்து இளிக்கலாமா பித்தளை? ஓ.பி.எஸ் ஆவது அண்ணா பெயர் உள்ள கட்சியிலிருந்து, அண்ணா ஆரம்பித்த தாய்க் கட்சிக்குத்தான் சென்றார்.

இந்தியை எதிர்ப்பதில் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கியாகச் செயல்படுவோம் என அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். சொன்ன கட்சிக்குத்தான் சென்று இருக்கிறார் ஓ.பி.எஸ். அவர்கள்.

சென்னை செயிண்ட்ஜார்ஜ் கோட்டையில், ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தில் கொடியேற்றுகிறேன் என்றால் அதற்குக் காரணமான என் நண்பர் கலைஞருக்கு நான் நன்றி சொல்கிறேன் என்று சொன்னாரே எம்.ஜி.ஆர். அந்த எம்.ஜி.ஆர். பாராட்டிய தி.மு.க. தலைவர் கலைஞரின் மகனிடம்தான் சென்று இருக்கிறார் ஓ.பி.எஸ்.

ஆனால் நீங்கள் உங்கள் சட்டைப் பையில் ஜெயலலிதா படத்தை வைத்துக்கொண்டு எங்கே சென்றிருக்கிறீர்கள்?

அன்றைய அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எந்த நடிகரை கொடநாட்டில் பல மணி நேரம் காக்கவைத்துக் கேவலப்படுத்தி அனுப்பி வைத்தாரோ, அந்த விஜயின் பக்கத்தில் வெட்கமில்லாமல் ஜெயலலிதா படத்தை வைத்துக் கொண்டிருக்கும் நீங்கள் தடம்மாறும் செய்தியைத் தொடலாமா?

அ.தி.மு.க ஜா, ஜெ அணி, சமாஜ்வாடி, தமிழ்மாநிலக் காங்கிரஸ், மீண்டும் அ.தி.மு.க. என படம் மாறினாலும் ஓரளவு தடம் மாறாது சபை நடத்தும் சபாநாயகர் ஜே.சி.டி பிரபாகரை எதிரில் வைத்துக்கொண்டு நீங்கள் இப்படி பேசலாமா?

நேர்மையின் சிகரம் என சொல்லிக்கொள்ளும் நீங்கள், தங்களுக்கு ஒதுக்கிய நிதித்துறையை வேண்டாம் எனக் கூறிவிட்டு, வருவாய்த்துறையை வாங்கியது எதற்கு? வருவாயினைப் பெருக்கிடவா?

அ.தி.மு.க. எம்.எல்.ஏ. தளவாய் சுந்தரம் திடீரென எழுந்து ஆஸ்டின் தி.மு.க.விற்கு மாறியதை குறை கூறுகிறார். ஆஸ்டின் அவராக - பக்குவமாக நேர்மையை நோக்கி நகர்ந்து விசுவாசம் காட்டியிருக்கலாம். ஆனால் சொந்தக் கட்சியிலேயே கட்சிக்கட்டுப்பாட்டை மீறியவர் என அன்றைய அ.தி.மு.க.விற்கு விருப்பமில்லாமல் இருந்த ஆர்.எஸ்.எஸ். உடன் கள்ள உறவு வைத்து அவர்களின் பேரணியை தொடக்கிவைத்தார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகி தனது சொந்தக் கட்சியைவிட்டு நீக்கப்பட்டவர் அல்ல அவர். ஆஸ்டின் இருக்கும் இடத்தில் விசுவாசமாக இருப்பவர்.

வி.சி.க.விற்குக் கடந்த தேர்தலில் நான்கு சட்டமன்ற உறுப்பினர் இருந்தும் ஏன் அமைச்சர் கொடுக்கவில்லை என்பது தவறான பேச்சு. அதிகாரம் இருக்கிறது என்பதற்காக யாரும் பேசக்கூடாது.

த.வெ.க.விற்கு மெஜாரிட்டி இல்லாததால் வி.சி.க.விற்கு அமைச்சரவையில் இடம் தருகிறேன் என்று விஜய் தந்தாரே தவிர, த.வெ.க.

150 இடம் பெற்றுவிட்டு வி.சி.க.விற்கு ஆட்சியில் பங்கு தரவில்லை.

தி.மு.க.வை விட்டுப் போன பா.ம.க. தன் அங்கீகாரத்தை இழந்தது. தி.மு.க.விடம் சேர்ந்த வி.சி.க. தனது அங்கீகாரத்தைப் பெற்றதை மறக்கக்கூடாது.

கடந்த 2026 தேர்தலில் காங்கிரஸின் குடைச்சலை சமாளிக்க புதிதாக சேர்ந்த தே.மு.தி.க.விற்கு 10 இடம், காங்கிரசுக்கு மூன்று இடம் அதிகம், புதிதாக சேர்ந்த தமிமுன் அன்சாரி, எஸ்.டி.பி.ஐ., முத்தரையர் அமைப்பு என பெருகியபோது முஸ்லீம் லீக், ம.தி.மு.க., கம்யூனிஸ்களிடம் சீட்டுகளை குறைத்த தி.மு.க. 2021 தேர்தலில் தான் நின்ற தொகுதிகளில் பனிரெண்டைக் குறைத்துக் கொண்டது. ஆனால் விடுதலை சிறுத்தைகளுக்கு மட்டும் இரண்டு சீட்டு அதிகம் கொடுத்தது. அதை 33 சதவீதம் அதிகம் கொடுத்தது எனலாம்.

2026 தேர்தல் முடிந்தவுடன் நாங்கள் ஆட்சி அமைக்க முன்வரவில்லை. "விஜயே ஆளட்டும், எங்களது தோழமைக் கூட்டணிக் கட்சிகள் விஜயினை ஆதரிக்கட்டும். அவரால் முடியாவிட்டால் தொல். திருமாவளவன் முதல்வர் ஆகட்டும்" என சிந்தித்த கூட்டம் தி.மு.க. கூட்டம். ரத்த உறவை அதிகாரத்துக்காக சிதைக்காதீர்கள்.

விடுதலை சிறுத்தைகளின் பொதுச் செயலாளர் தமிழின் சிற்பி சிந்தனைச்செல்வன் "நன்றி கூறுகிறோம்" என்கிற தி.மு.க.வின் புதிய அரசாணைக்கான நன்றி அறிக்கையையும், சிந்தனைச் செல்வன், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களின் பிறந்தநாள் வாழ்த்து அறிக்கையையும், கலைஞரின் நினைவு நாளில் தனது பழைய கட்டுரையைத் திருப்பி முகநூலில் போட்டு நன்றி சொன்ன பொதுச்செயலாளர் ரவிக்குமார் வாழ்த்தையும்

பா.ஜ.க. போட்ட தற்காலிக தலைமைச் செயலாளரை வைத்துக்கொண்டு இந்திக்குப் பந்தி விரிக்கும் த.வெ.க.வை எப்படி ஆதரிப்பது என்கிற வி.சி.க.வின் முதன்மைச் செயலாளர் ஆளூர் ஷாநவாஸ் கருத்தையும் தொண்டர்கள் ஏற்கிறார்கள்.

த.வெ.க.வை ஆதரித்தாலும், தி.மு.க.வை கண்ணை மூடிக்கொண்டு எதிர்க்காத எழுச்சித் தமிழர் தொல். திருமாவளனை பின்பற்றுபவர்கள் தி.மு.க.வை குறை கூறமாட்டார்கள்.

"தேர்தலில் நான் தோற்றால் கூட பரவாயில்லை. வன்னியரசு தோற்கக் கூடாது" எனப் பிரச்சாரம் செய்த இளைய கலைஞர் உதயநிதியை எதிர்க்கக் காரணம் இல்லாமல் தூற்றவும் கூடாது. காரணம் இல்லாமல் சிரிக்கவும் கூடாது, எதிர்காலத்தில் சந்திக்கும்போது மனவேதனையுடன் கைகுலுக்கக் கூடாது.

சட்டமன்றத்தில் 2006-ல் காங்கிரஸ் துணையுடன் ஆட்சியில் அமர்ந்து விட்டு காங்கிரசை திட்டலாமா என ஒரு குரல். அது மக்கள் குரலும் அல்ல. திருக்குறளும் அல்ல. விசில் குரல்.

அதே சட்டசபையில் அண்ணன் வேலுகூட 2006-ல் காங்கிரஸ் ஆதரவு அல்லாமல் பா.ம.க.வும் தி.மு.க.வுக்கு ஆதரவாக இருந்தது என்றார். பா.ம.க. மட்டுமல்ல எங்களிடம் கம்யூனிஸ்டுகளும் இருந்தனர்.

163 சட்டமன்ற உறுப்பினர்கள், கலைஞர் முதல்வர் என ஓட்டுக் கேட்டு வெற்றி பெற்று சபைக்கு வந்தவர்களின் ஆதரவோடு ஆட்சி அமைத்தோம்.

த.வெ.க. அப்படியா என்றால் இல்லை. தளபதி ஸ்டாலின் முதல்வர் எனச் சொன்னவர்கள் 13 பேர் ஆதரவுடன், பொய்க்கால் குதிரைபோல விஜய் ஆட்சி அமைத்தார். இரண்டையும் ஒப்பிடக்கூடாது.

தி.மு.க. ஒப்பிலா வைரம். விரைவில் தமிழக ஆட்சிக் கட்டிலில் தி.மு.க. அமரும்.


அறிவாலயத்தில் தந்தை பெரியார் சிலை வைக்கணுமாம். வளர்ந்து கெட்டவன் உளறுகிறார்.

இயக்கத்தின் தலைமை அலுவலகம் தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட கட்சி. ஆதலால் கட்சித்தலைவர்களே முகப்பில் காட்சியளிப்பர். அலுவலக முகப்பில் தந்தை பெரியார் சிலை என்றால் நாங்கள் திராவிட கழகத்திலேயே இருந்திருக்கலாமே.

அ.தி.மு.க. அலுவலகத்தில் "அண்ணா" பெயர் இருக்கும், சிலை இருக்காது. அ.தி.மு.க. அலுவலக இடம் ஜானகி அம்மையார் தந்தது. அ.தி.மு.க. அலுவலகத்தில் ஜானகி அம்மையார் சிலை இருக்காது.

உலகத்தலைவர்கள், தேசத்தலைவர்கள், படைப்புகள், வரலாறு அறிவாலயத்தில் உள்ளே கருவூலத்தில் உள்ளது. திராவிடர் கழக அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா, கலைஞர் சிலை இருக்காது. ஆனால் ஆசிரியரின் அறைகளில் அண்ணா, கலைஞர் படம் இருக்கும்.

நடிகர் பாக்யராஜ் ஒரு படத்தில் வீட்டில் தன் படத்தை டாக்டர் மாதிரி, இன்ஸ்பெக்டர் மாதிரி, அட்வகேட் மாதிரி, விமான ஓட்டி மாதிரி என பலவேடங்களில் மாற்றி வைத்திருப்பார்.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

அவருக்கு என்று வழக்கறிஞர் பட்டம் இருந்தால் கருப்பு கவுனுடன் காட்சி அளிக்கலாம். அவருக்கு படிப்பில்லாததால் எல்லா வடிவ ஆடையுடனும் தோற்றமளிப்பார்.

த.வெ.க.வுக்கு ஒரு வரலாறு இல்லை. காட்சிக்காவது உண்டா என்றால் அதுவும் இல்லை.

கட்சிக்கு உள்ளார்ந்த தலைவர்கள் இல்லை. அதனால் காசுக்கு இரண்டு பொம்மைகள் வாங்கி வருவது போல தலைவர்களின் பொம்மைகளை வைத்து இருக்கிறாய். நாங்கள் எங்கள் கட்சித் தலைவர்களைக் கருவூலத்தில் பாடமாக வைத்திருக்கிறோம்.

அ.தி.மு.க. உறுப்பினர்களை தன் கட்சியில் இடைத்தேர்தல் மூலமாக இணைத்துவிட்டு, பிறகு காங்கிரசினை கழட்டி விடும் வகையில் "விஜய் பிரதமர்" எனும் கோஷத்தை எழுப்ப இருந்த த.வெ.க.வினர் அவசரப்பட்டு முன்கூட்டியே கோஷம் எழுப்பி, காங்கிரசினருடன் வருத்தத்தில் முடிந்திருக்கிறது.

கட்சியை உளவு பார்த்ததை எடுத்துச்சொல்லியும், பட்டும் படாமல் மெல்லிய நடவடிக்கை என நடவடிக்கை எடுத்ததால் கம்யூனிஸ்ட்டுகளின் ஆதரவும் வருத்தத்தில் முடிந்திருக்கிறது.

தி.மு.க. தலைவருக்கு தந்த பாதுகாப்பை மட்டரகமாக திரும்ப பெற்றதற்காகவும், கம்யூனிஸ்ட்களிடம் நடந்து கொண்ட பா.ஜ.க.வின் ஊதுகுழல் நிகழ்வுக்காவும், எழுச்சித்தமிழர் தொல். திருமாவளவனும் தன் கண்டனத்தை தெரிவித்ததுடன், தி.மு.க.வினர் தாழ்த்தப்பட்டோருக்கு நிறைய செய்திருக்கிறார்கள் என்று சொன்னதான் மூலம் விடுதலை சிறுத்தைகளின் உறவும் வருத்தத்தில் தொடர்கிறது.

ஆக மொத்தமுள்ள 234-ல் ஏழு இடம் காலியான சூழலில் 227 உறுப்பினர் தமிழக சட்டமன்றத்தில் இருக்கின்றனர். முழு ஆதரவு தேவை எனில் குறைந்தபட்சம் 114 இருக்க வேண்டும். ஆனால் இருக்கும் 106 மற்றும் திருவாரூர் காமராஜுடன், முஸ்லீம் லீக் இரண்டு என 109 மட்டுமே முழு ஆதரவுடன் தொடர்கிறது த.வெ.க. அரசு.

வி.சி.க.வை சமாதானப்படுத்திட எதிர்க்கட்சியின் தலைவராம் முன்னாள் முதல்வருக்கு தந்த பாதுகாப்பின் பகுதியை குறைத்ததை திரும்ப பெற்று இசட்பிரிவு பாதுகாப்பு கொடுக்கவேண்டும்.

கொள்கை விளக்க குறிப்பேட்டில் தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர் பெயரினை உடனடியாக சேர்க்க வேண்டும்.

அல்லது த.வெ.க. இராஜினாமா செய்துவிட்டு தேர்தலை சந்திக்க வேண்டும். அதுவரை இதுகுறித்து சிந்திக்க வேண்டும்.

"கெட்டிக்காரியின் பொய்யும் புரட்டும் டக்குமுக்கு திக்குதாளம் எட்டு நாளிலே புரிஞ்சு போகும்" என்று கவிஞர் கண்ணதாசன் சொன்னது உண்மைதான். எட்டு நாள் என்பது நூறு நாளில் தெரிந்துவிட்டது.

அடிக்கிற ஆடிக்காற்றில் அம்மி பறக்கலாம், இமயம் பறக்காது. அறிவாலயம் காலியாகாது, தலைமைச் செயலகம்தான் காலியாகும். புரிந்து கொண்டவர்கள், புரியாதவர்களுக்கு புரியவைக்க வேண்டும். தமிழக பண்பாட்டின் நெறியை காப்பாற்ற வேண்டும்.

இவ்வாறு தி.மு.க. வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் த.வெ.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்.